மாலை முரசு

பக்கங்கள் 17+ 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | சித்திரை 02 செவ்வாய்க்கிழமை 15.04.2025 | அதிர்வு 255


## கோர விபத்தில் சிறுமி மரணம்!

**6 பேருக்குக் காயம்**

எல்பிட்டிய – அம்பலாங்கொடை வீதியில் இடம்பெற்ற கோர விபத்தில் 6 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். 02


'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்


# நீதிமன்ற உத்தரவை கட்சிகளிடம் கோருகின்றது தேர்தல் ஆணையம்

**மனுக்கள், தீர்ப்புகளின் நகல்களை வழங்க வேண்டுகோள்**

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் நிராகரிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுக்கு தேசிய தேர்தல் ஆணையம் ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.




உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக ஏதேனும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், மனுக்கள் மற்றும் தீர்ப்புகளின் நகல்களை வழங்குமாறு 02





# பிள்ளையானுடன் உரையாட ரணிலுக்கு அனுமதி மறுப்பு

**நேரில் பார்வையிட கம்மன்பிலவுக்கு அனுமதி**

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் என்றழைக்கப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தனுடன் உரையாடுவதற்கு வாய்ப்பளிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. 02



## கடலில் தவறி வீழ்ந்த மீனவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாலமுனை நடுத்துறை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது தவறி வீழ்ந்து காணாமல்போன மீனவர் ஒருவர் இன்று செவ்வாய்க்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பாலமுனையைச் சேர்ந்த 02



## மோட்டார் சைக்கிள் மோதி ஆண் ஒருவர் பரிதாபப் பலி

யாழ்ப்பாணத்தில் வீதியோரமாக நின்று நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்த நபர் ஒருவர் மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

வல்வெட்டித்துறை, ஆதிகோயிலடியைச் சேர்ந்த 65 வயதுடைய 02

## முன்னாள் சிறைச்சாலை அதிகாரி சுட்டுக்கொலை:

# பிரதான துப்பாக்கிதாரி தப்பியோடும்போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது!

பூஸா சிறைச்சாலையின் முன்னாள் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான துப்பாக்கிதாரி போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி தாய்லாந்துக்குத் தப்பிச் செல்ல முயன்றபோது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் இன்று செவ்வாய்க் கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் அம்பலாங்கொடை, குளிவத்த பிரதேசத்தில் வசிக்கும் விஜேமுனி லலன்த பிரிதிராஜ் குமார என்பவர் ஆவார்.

சந்தேகநபர் இன்று காலை 7.50 மணியளவில் தாய்லாந்தின் பாங்கொக் நகரத்தை நோக்கி செல்வதற்காகக் கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

இதன்போது சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட சோத னையில் அவர் கொண்டு வந்த கடவுச்சீட்டு போலியானது எனத் தெரியவந்துள்ளது.

பின்னர் சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளில் அவர் பாதாள உலகக் கும்பலின் தலை வரான "கரந்தெனிய சுத்தா" என்பவரின் பிரதான துப்பாக்கி தாரி ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து சந்தேகநபர் குற்றப் புலனாய்வு திணைக் கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# கப் வாகனம் விபத்து! இருவர் உயிரிழப்பு!!

மிஹிந்தலைப் பகுதியில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

கப் வாகனத்தைச் சாரதியால் கட்டுப் படுத்த முடியாமல் போனதால், கப் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விபத்தில் சாரதியும் மற்றொரு நபரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் 25 மற்றும் 37 வயதுடையவர்கள் என்றும், அவர்கள் அனுராதபுரம் மற்றும் பலுகஸ்வெவ பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் செயலாளர்கள் மற்றும் அங்கீக ரிக்கப்பட்ட பிரதிநிதிகளைத் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண் டுள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச் சைக் குழுக்கள், தத்தமது மனுக்கள் மற் றும் தீர்ப்புகளை சம்பந்தப்பட்ட மாவட் டத்தின் மாவட்டத் தேர்தல் அலுவல கங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளன.

மே 06, 2025 அன்று திட்டமிடப்பட்டி ருந்த தேர்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட பல வேட்புமனுக்கள், பிறப்புச் சான் றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல் களைச் சமர்ப்பிக்காதமை, முறையாக உறுதிமொழி எடுக்காதமை மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் நகல்களை மட்டுமே சமர்ப்பித்தமை ஆகியவற்றின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டன.

இருப்பினும், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட எழுபதுக்கும் மேற்பட்ட வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ள மேன்முறையீட்டு நீதி மன்றம் உத்தரவிட்டது.

இந்த மனுதாரர்களையே விவரங்க ளைச் சமர்ப்பிக்கும்படி தேர்தல்கள் ஆணைக்குழு கோரியிருக்கின்றது.

## பிள்ளையானுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இதனைத் தெரிவித் துள்ளார்.

தற்போது தடுப்புக் காவலில் வைக் கப்பட்டுள்ள சிவநேசத்துரை சந்திரகாந் தனுடன் தொலைபேசி மூலம் உரையாட அனுமதிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 9 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக் களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும், குறித்த கோரிக்கை நிறை வேற்றப்படவில்லை எனவும், தடுப்புக் காவலில் உள்ள சந்தேகநபருடன் தொலைபேசியில் உரையாடுவது சட்டவிரோதமானது எனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

அத்துடன் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு முன்னாள் இரா ஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திர காந்தனை நேரில் சந்திப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

சிவநேசத்துரை சந்திரகாந்தனின் சட்டத்தரணியாக உதய கம்மன்பில செயற்பட்டதால் அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது என்றும் அமைச்சர் கூறினார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப் பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக 18 ஆண்டுகளின் பின்னர், கடந்த 8 ஆம் திகதி கைது செய்யப்பட்ட சிவநேசத்துரை சந்திரகாந்தன் தற்போது குற்றப் புல னாய்வுத் திணைக்களத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

## கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

59 வயதுடைய மீனவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி மீனவர் நேற்று திங்கட்கிழமை இரவு கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ள நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் மீன்பிடித்து விட்டு படகின் ஒரு பகுதியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது மீனவர் கடலில் தவறி வீழ்ந்து காணாமல்போயுள்ளார்.

இதனையடுத்து காணாமல்போன மீனவரைத் தேடும் பணிகள் முன்னெ டுக்கப்பட்டிருந்த நிலையில், இன்று காலை மீனவர் சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணை களை காத்தான்குடி பொலிஸார் மேற் கொண்டுள்ளனர்.

## மோட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நபரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் கடந்த 11ஆம் திகதி தனது வீட்டுக்கு அருகில் சைக்கிளை நிறுத்தி வைத்து வீதியோரமாக நின்று தனது நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

இதன்போது வேகமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று அவர் மீது மோதியது.

விபத்தில் மேற்படி நபரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகா யமடைந்துள்ள நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் 65 வயதுடைய நபர் சிகிச்சை பலனின்றி நேற்று (14) திங்கட்கிழமை உயிரிழந்தார்.

## கோர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இந்த விபத்தில் 6 பேர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஓட்டோ ஒன்றும் வான் ஒன்றும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசா ரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# ஜனாதிபதி பதக்கத்தைப் பெற நடை பயணத்தில் மாணவர்கள்

## கல்முனை சுகாதார அலுவலகத்தில் வரவேற்பு

(றியாஸ் ஆதம்)

ஜனாதிபதி பதக்கத்தை பெறும் பொருட்டு விசேட துணிகர நடை பயணத்தை முன்னெடுத்துள்ள கல்முனை சாஹிரா கல்லூரி சாரணர் இயக்க மாணவர்களுக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் வரவேற்பளிக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைவாக, ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம். எஸ்.இர்சாத் உள்ளிட்ட பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டு மாணவர்களை வரவேற்றனர்.

இதன்போது மாணவர்களின் துணிகர செயற்பாட்டைப் பாராட்டிய பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.





# மன்னார் நானாட்டான் பங்கு மக்கள் வழுங்கிய திருப்பாடுகளின் காட்சிகள்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மறை மாவட்டத்தின் பிரதான பங்குகளின் ஒன்றான நானாட்டான் பங்கு மக்கள் கடந்த 7 ஆண்டுகளின் பின்னர் மிக பக்தி உணர்வுடன் வழுங்கிய திருப்பாடுகளின் திருப்பயணிகள் எனும் தலைப்பிலான தவக்கால மேடை ஆற்றுகை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (13) அரங்கேற்றியுள்ளனர்.

நானாட்டான் புனித ஆரோக்கிய அன்னை ஆலய முன்றலில் ஆற்றுகை இடம் பெற்றது.

இந்த ஆற்றுகை நிகழ்வுக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார், ஓய்வு நிலை ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை தமிழ்



நேசன் அடிகளார், அருட் சகோதரர்கள், அருட் சகோதரிகள், அருட்பணியாளர்கள் மற்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது திருப்பாடுகளின் காட்சி உணர்வுடன் சிறப்பாக இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.







# பாடுமீன் விற்பனைச் சந்தையை திறந்து வைத்தார் அரச அதிபர்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா யுலேக்கா முரளிதரனால் கல்லடி பழைய பாலத்துக்கு அருகாமையில் சுய தொழில் முயற்சியாளர்களின் "பாடுமீன் சந்தை" விற்பனைச் சந்தை ஞாயிற்றுக் கிழமை (13) மாலை திறந்து வைக்கப் பட்டது.

மட்டு. சுயதொழில் முயற்சியாளர்கள் சம்மேளனமானது சுய தொழில் முயற்சியாளர்களது மேம்பாடு மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு கடந்த ஒரு வருட காலமாக மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் சேவையாற்றி வருகின்றது.

சம்மேளனத்தின் செயற்பாடுகளின் ஒரு அங்கமான மாவட்டத்தில் சுயதொழில் முயற்சியாளர்களுக்கான சந்தை வாய்ப்பு மிகவும் அரிதாக காணப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு சுயதொழில் முயற்சியாளர்களுக்கு நிரந்தர சந்தை வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கும் முகமாக கல்லடி பழைய பாலத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள கல்லடி பிறிஜ் மார்க்கெட்டில் வாராந்தம் வெள்ளிக்கிழமை, சனிக் கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் பூரணை தினங்களில் மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை மாலை நேர "பாடு மீன்" விற்பனைச் சந்தையாகத் தொடர்ச்சியாக நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அதனை நடைமுறைப்படுத்தும் வண்ணமே இந்தச் சந்தை திறந்து வைக்கப்பட்டுள்ளது.



இந்தச் செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மண்முனை வடக்கு பிரதேச செயலகம் ஆகிய அரச நிறுவனங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குவதால் இந்தச் செயற்றிட்டத்தைச் சிறந்த முறையில் முன்னெடுத்து செல்வதற்கான ஆரம்ப நிகழ்வு அரச அதிபரால் முன்னெடுக்கப்பட்டது.

சம்மேளனத்தின் தலைவர் சாமஸ்ரீ தேசமான்ய உ.உதயகாந்த் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டு நாடா வெட்டி சந்தையை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்விற்கு விசேட அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் உதவி அரச அதிபர் ஜீ.பிரணவன், மட்டக்களப்பு வர்த்தக சம்மேளனத்தின் தலைவரும் மட்டக்களப்பு வர்த்தக சங்க தலைவருமாகிய தேசபந்து முத்துகுமார் செல்வராசா, சமாரிற்றன் பேஸ் நிறுவனத்தின் திட்ட உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர் நிலோசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது சம்மேளனத்தின் இரண்டு சுய தொழில் முயற்சியாளர்களுக்கு புதிய தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கான அன்பளிப்பு வழங்கப்பட்டது.

சம்மேளனத்தின் ஆலோசகரும் மட்டக்களப்பு வர்த்தக சம்மேளனத்தின் தலைவரும் மட்டக்களப்பு வர்த்தக சங்கத்தின் தலைவருமாகிய தேசபந்து முத்துகுமார் செல்வராசா சொந்த நிதியில் இருந்து தலா 25 ஆயிரம் ரூபா வீதம் வழங்கினார். குறித்த சம்மேளனத்தின் முயற்சிக்கு சமாரிற்றன் பேஸ் நிறுவனத்தால் சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான மின் பிறப்பாக்கி இதன் போது வழங்கி வைக்கப்பட்டது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீட்சி இப்போதைக்கு இல்லை

முன்பின் காணாத வரலாற்றுப் பொருளாதாரச் சரிவைச் சந்தித்த இலங்கை, அதிலிருந்து மீண்டெழுவதற்குத் தள்ளாடித் தள்ளாடி முயன்று கொண்டிருக்கின்றது.

அத்தியாவசிய பொருள்களுக்கு வெளிநாடுகளின் விநியோகத்தில் பெரும்பாலும் தங்கி இருக்கும் இலங்கை, அதற்காக நாளாந்தம் பெருந் தொகை அந்நிய செலாவணியை இழந்து வருகிறது. நாட்டின் பொருளாதார மோச நிலைமைக்கு இதுதான் பிரதான காரணம்.

உற்பத்திப் பொருளாதாரம், ஏற்றுமதிப் பொருளாதாரம் என்ற திசையில் நாடு முன்னேறினால்தான் இந்த நெருக்கடியில் இருந்து மீள முடியும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

ஆனால் நாட்டின் உற்பத்தியும் ஏற்றுமதியும் எதிர்பார்த்த வகையில் முன் நகர்வனவாக இல்லை.

நாட்டின் உற்பத்தி தொடர்பில் இப்போது மத்திய வங்கி வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்கள் இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களிலும் திருப்தி தருவனவாக அமையவில்லை என்பதுதான் துரதிஷ்டகரமான செய்தியாகும்.

கடந்த ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் இலங்கையின் நெல், மீன், தேங்காய், தேயிலை மற்றும் ரப்பர் ஆகியவற்றின் விவசாய உற்பத்தி குறைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2025 ஜனவரி மாத இறுதியில் விதைக்கப்பட்ட பரப்பின் அடிப்படையில், இந்தப் பெரும் போகத்திற்கான நெல் உற்பத்தி 2.61 மில்லியன் மெட்ரிக் தொன்களாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது, இது முந்தைய பெரும் போகத்தை விட 4.2 வீதம் குறைவு என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2024 இல் சிறுபோகத்திற்கான நெல் உற்பத்தியும், மொத்த நெல் உற்பத்தியும் அதற்கு முந்திய ஆண்டை விட அதிகரித்திருந்த போதிலும், இவ்வாண்டின் ஆரம்பத்தில் அது வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

இதற்கிடையில், மீன் உற்பத்தி 2024 ஜனவரியுடன் ஒப்பிடும்போது 2025 ஜனவரியில் 15.1 வீதம் குறைந்துள்ளது. இது பெரும்பாலும் உள்நாட்டு மீன்பிடி நடவடிக்கைகளில் ஏற்பட்ட சரிவுகளால் நேர்ந்தது எனக் கூறப்படுகின்றது.

உள்நாட்டு தேயிலை உற்பத்தி 2024 பெப்ரவரியுடன் ஒப்பிடும்போது 2025 பெப்ரவரியில் 22.0 வீதம் குறைந்துள்ளது, அதே நேரத்தில் உலகளாவிய தேயிலை விலைகளும் முந்தைய மாதத்துடன் ஒப்பிடும்போது தொடர்ந்து சரிந்துள்ளன.

வறண்ட வானிலை காரணமாக பெப்ரவரி 2025 இல் உள்நாட்டுத் தேயிலை உற்பத்தியும் 22 வீதம் குறைந்துள்ளது.

தேங்காய் உற்பத்தியும் 2025 பெப்ரவரியில் - ஆண்டுக்கு ஆண்டு என்ற கணக்கீட்டு அடிப்படையில் - 31.6 வீதத்தில் குறிப்பிடத்தக்க சரிவைச் சந்தித்தது.

ரப்பர் மேம்பாட்டுத் துறையின் தற்காலிக தரவுகளின்படி, பெப்ரவரி 2025 இல் உள்நாட்டு ரப்பர் உற்பத்தியும் ஆண்டுக்கு ஆண்டு சரிவைக் கண்டுள்ளது.

முக்கிய சாகுபடிப் பகுதிகளில் உற்பத்தியைத் தடுத்த பாதகமான வானிலை உள்ளிட்ட சவால்கள் காரணமாக உலக சந்தைகளில் இயற்கை ரப்பர் விலைகள் பெப்ரவரி 2025 இல் அதிகரித்தன.

மிளகு, கோபி, கொக்கோ, ஏலக்காய் மற்றும் ஜாதிக்காய் போன்ற பல ஏற்றுமதிப் பயிர்களின் சந்தை விலைகள் பெப்ரவரி 2025 இல் அதிகரித்தன. அதே நேரத்தில் இலவங்கப்பட்டை, கிராம்பு, இஞ்சி மற்றும் மஞ்சள் விலைகள் சரிவைப் பதிவு செய்தன.

மிளகு, இலவங்கப்பட்டை மற்றும் கிராம்பு ஏற்றுமதியில் வலுவான செயல்திறன் காரணமாக, பெப்ரவரி 2025 மாதத்தில் மசாலாப் பொருள்களின் ஏற்றுமதியிலிருந்து வருவாய் அதிகரித்தது.

உற்பத்திப் பொருளாதார விடயங்களில் பதிவாகியுள்ள இந்த வீழ்ச்சி, நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து விரைந்து மீளுவதற்கு வாய்ப்பில்லை என்ற செய்தியைத்தான் நமக்குத் தந்து நிற்கின்றன.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்



# ஊழலற்ற மக்களாட்சியை மாம்பழச் சின்னம் வழங்கும்!

(அபு அலா )

ஊழலற்ற மக்களாட்சியை எதிர்பார்க்கும் மக்களுக்கான சிறந்ததொரு ஆட்சியை செய்வதற்கான ஆணையை சுயேச்சை குழுவான மாம்பழச் சின்னத்துக்கு வழங்கி சம்மாந்துறை பிரதேச சபையைத் தாருங்கள் என்று நாபீர் பௌண்டேஷன் ஸ்தாபகத் தலைவர் பொறியியலாளர் கலாநிதி உதுமான் கண்டு நாபீர் தெரிவித்தார்.

மக்களை ஏமாற்றும் வங்குரோத்து அரசியலுக்கு முடிவுகட்டி நாகரீகமான பிரதேச ஆட்சிக் கட்டமைப்பை உருவாக்க சுயேட்சை குழு மாம்பழச் சின்னத்துக்கு சம்மாந்துறை மக்கள் வாக்களிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சம்மாந்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அம்பாறை மாவட்டத்திலுள்ள மக்களின் பிரச்சினைகள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. எமது பிரச்சினைகளை தீர்த்து வைக்கின்றவர்களை நாம் தெரிவு செய்யவேண்டும். வெறும் பொய்களுக்கும், கட்டுக்கதைகளுக்கும் மக்கள் தொடர்ந்து ஏமாறக்கூடாது என்றும் கலாநிதி உதுமான்கண்டு நாபீர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபையின் ஆட்சி என்பது ஒரு குட்டி அரசு போன்றது. இந்த குட்டி அரசசுக்குக் கடந்த காலங்களில் சிறுபான்மை கட்சிகளுக்கு சம்மாந்துறை மக்கள் ஆணை வழங்கியதனூடாக அடைந்த நன்மைகள் என்ன என்ற கேள்வியையும் அவர் எழுப்பினார்.

ஏமாற்று அரசியலை சம்மாந்துறை மண்ணில் விதைத்த சிறுபான்மைக் கட்சிகளுக்கு கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் சரியான பாடத்தை எமது மக்கள் புகட்டினார்கள். ஆனால் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு வாக்களித்ததன் ஊடாகவும் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப் பட்டுள்ளார்கள் என்பதை சம்மாந்துறை மக்கள் இப்போது உணர்ந்துள்ளனர்.

எனவே, புதிய மாற்றத்துக்காகவும், நாகரிகமான அரசியல் கட்டமைப்புக்காகவும், உழலற்ற மக்களுக்கான ஆட்சியும சுயேச்சை குழுவான மாம்பழ சின்னம் வழங்கும் என்றும் அதற்கான ஆணையைத் தாருங்கள் என்றும் அவர் மக்களை கேட்டுக்கொண்டார்.

நிச்சயமாக இந்த முறை மாம்பழச் சின்னம் சம்மாந்துறை பிரதேச சபையைக் கைப்பற்றி ஆட்சியமைக்கும். மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் நிச்சயம் மலரும் என்றும் பொறியியலாளர் கலாநிதி உதுமான்கண்டு நாபீர் மேலும் தெரிவித்தார்.








# கனிஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான பயிற்சி

(பழுவூரான்)

உள்ளூர் அதிகார சபை தேர்தலின் போது கடமையில் ஈடுபடவுள்ள கனிஸ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு மட்டக்களப்பில் இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான திருமதி ஜஸ்டினா முரளிதரனின் வழிகாட்டுதலின் கீழ் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் போது கடமையில் ஈடுபடும் கனிஸ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கான பயிற்சி செயலமர்வானது மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியானின் தலைமையில் பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (15) இடம் பெற்றது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் போது மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த விடயங்கள் தொடர்பாகவும், தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்கள்



தொடர்பாகவும் இதன் போது விரிவாகத் தெளிவூட்டப்பட்டது.

மேலும் சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலருடன் இணைந்து வினைத்திறனான சேவையை வழங்க வேண்டும் என்று இந்தச் செயலமர்வின் போது சுட்டிக் காட்டப்பட்டது.





# சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டு கழக புதுவருட விளையாட்டும் மாணவர் கௌரவிப்பும்

(எஸ். நிதர்ஷன்)

சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டு கழகத்தால் வருடா வருடம் முன்னெடுக்கப்படும் வருடாந்த மாணவர் கௌரவிப்பும் விளையாட்டு நிகழ்வுகளும் கலைமகள் கலையரங்கில் விளையாட்டு கழகத்தின் தலைவர் நீல வண்ணன் அனிஸ்ரன் தலைமையில் இடம் பெற்றது.

புதுவருட பிறப்பு நிகழ்வுகளின் பகுதியாக நீச்சல் போட்டி , சதுப்பு நில நடை போட்டி, மரதன், கிரிக்கெட், உதைபந்தாட்டம் உட்பட பல்வேறு பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் இடம் பெற்றன.

இதேவேளை, கலைமகள் கலையரங்கில் க.பொ.த. உயர்தர , சாதாரண தரம், புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு இடம்பெற்று விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

தொடர்ந்து விசேட கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. கலைமகள் இலவசக் கல்வி நிலைய மாணவர்களின் ஆரோடு நோகேன் எனும் நாடகம் சி.பிரசாந்தின் நெறியாள்கையுடன் விசேட நிகழ்வாக அரங்கேறியது.

பிரதம விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி, சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எவ்.சி.சத்தியசோதி, கௌரவ விருந்தினராக கிராம அலுவலர் நடராஜா சிவரூபன், மென்பொருள் பொறியாளர் விமலாம்பிகைபாகன் திவாகரன், சுழிபுரம் மேற்கு சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.









# முன்னாள் எம்.பி. ஹரீஸின் நிதி ஒதுக்கீட்டில் கல்முனையில் மெரின் டிரைவ் வீதி திருத்தம்

(மாளிகைக்காடு நிருபர்)

சனநெரிசல் கூடிய கல்முனை மாநகரத்தின் வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், கல்முனை மாநகரத்துக்கு வர்த்தக நோக்கத்துக்காக வரும் வெளியூர் வர்த்தகர்கள், பயணிகளின் அசௌகரியத்தை குறைக்கவும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸின் முயற்சியின் பயனாக கார்பட் வீதியாக புனரமைக்கப்பட்ட நிந்தவூர்- பெரிய நீலாவணையை இணைக்கும் மெரின் டிரைவ் கடலோரப் பாதை மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம். எம் ஹரீஸ் பி -100 திட்டத்தின் கீழ் சுமார் 65 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் கல்முனை மாநகர பிரதேசத்தை குறிப்பாக சாய்ந்தமருது, கல்முனை மற்றும் மருதமுனையை ஊடறுக்கும் இந்த மெரின் டிரைவ் திட்டத்தின் முதலாம் கட்டம் நிறைவடைந்துள்ளது.

இலங்கையின் இரண்டாவது மிகப்பெரிய மீன் சந்தை உட்பட கடல்சார் வியாபார நிலையங்களை நிறையவே கொண்டுள்ள இந்தப் பிராந்திய வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களின் நன்மை கருதி செய்யப்பட்ட இந்த அபிவிருத்தி திட்டமானது பிராந்திய பொருளாதார வளர்சிக்கும், மக்களின் இலகுவான போக்குவரத்துக்கும் உதவியாக அமைந்துள்ளது. இந்தப் பாதையில் தினமும் ஆயிரக் கணக்கான மக்கள் போக்குவரத்து மேற்கொண்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



இந்தப் பாதையின் பயன்பாடுகள் மற்றும் மேலதிக அபி விருத்தி திட்டங்கள் தொடர்பில் ஆராய முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் அண்மையில் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஆராய்ந்தார்.



# மட்டுவில் ஞானதீபம் முன்பள்ளிக்கு குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம்

**(த.சுபேசன்)**

தென்மராட்சி – மட்டுவில் ஞானதீபம் முன்பள்ளிக்கு குடி தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று வழங்கி வைக்கப் பட்டுள்ளது.

அழகசுந்தரம் புவனேந்திரா என்ப வரின் நினைவாக சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம் ஊடாக மேற்படி உதவித்திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.











# தொற்றா நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச்செல்கின்றது

## வைத்திய கலாநிதி சகீலா இஸ்ஸடீன் தெரிவிப்பு

(றியாஸ் ஆதம்)

உலகளாவிய ரீதியில் தொற்றா நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் தொற்றாநோயின் வகை என்பன அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. அதற்குரிய பலவிதமான அபாயக் காரணிகள் மக்களிடத்தில் மலிந்து காணப்படுகிறத. இளவயது மரணங் களும் அதிகமாக ஏற்படுகின்றன.

இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதர சேவைகள் பணிப்பாளர் வைத் திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸ டீன் தெரிவித்தார்.

கல்முனை பிராந்தியத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவ லகங்களில் பணியாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு தொற்றா நோய், சுகாதார உணவு பழக்க வழக்க முறை பற்றிய பயிற்சிக் கருத்தரங்கு பிராந்திய சுகாதர சேவைகள் பணி மனையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக் கையில்,



தொற்றா நோயாளர்களின் எண் ணிக்கை மற்றும் தொற்றா நோயின் வகை என்பன தற்போது அதிகரித்துக் கொண்டு செல்கிறது. பிழையான உணவுப் பழக்க வழக்கம் மற்றும் போதிய உடற்பயிற்சி இன்மையே இதற்குப் பிரதான காரணமாகும். எமது நாட்டில் இடம்பெறும் மரணங்களில் அதிகமானவை தொற்றா நோயால் ஏற்படுகின்ற மரணங்களாக உள் ளன.

இவற்றைக் கருத்தில் கொண்டு, தொற்றா நோய் தொடர்பாகவும், அத னால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றியும், போசாக்கு நிறைந்த சம நிறைவான உணவை ஊக்கப்படுத்துதல், சுகா தாரமான உணவுகளை உட்கொள்ளுதல் மற்றும் உடற்பயிற்சியின் அவசியம் குறித்தும் சமூக விழிப்புணர்வை ஏற் படுத்தும் பொருட்டு பிராந்திய தொற்றா நோய் தடுப்பு பிரிவால் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.- என்றார்.

கல்முனை பிராந்திய தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷ ாட், பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எஸ்.எம்.பௌஷாத் ஆகி யோரும் இந்த நிகழ்வில் உரையாற் றினர்.

# யானை - மோட்டார் சைக்கிள் விபத்து: இளைஞன் பலி; மற்றொருவர் காயம்!

(எஸ்.கீதபொன்கலன்)

யானையுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்கு உள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் திருகோணமலை - புத்தளம் ஏ - 12 பிரதான வீதியின் கன்னியா பகுதியில் திங்கட்கிழமை (14) இரவு இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வவுனியா புளியங்குளம் பகுதியைச் சேர்ந்த முபாரக் நிப்றாஸ் (வயது - 28) என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார். அவரது சக நண்பரான சயான் (வயது - 22) என்பவர் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் யானையுடன் மோதியதால் விபத்து இடம்பெற்றுள்ளது என்று முதற்கட்ட விசாரணையில் தெரிய வருகின்றது. மேலதிக விசாரணைகளை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# அரசியல் கட்சிகளிடையே சம்மாந்துறையில் மோதல்!

## காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புறநகர் பகுதியான நாய்குட்டியர் சந்தி பகுதியில் ஏற்பட்ட மோதல் ஒன்றில் பலர் காயமடைந்த நிலையில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்,தேசிய காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கிடையில் இடம்பெற்ற கைகலப்பில் தேசிய காங்கிரஸ் வீரமுனை வட்டார வேட்பாளர் காயத்திற்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை (14) இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. காயமடைந்த தேசிய காங்கிரஸின் வீரமுனை வட்டார வேட்பாளர் ஏ.சி.எம். சஹீலை சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்த தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லாஹ் பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்துள்ளார்.




முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் வருகை தந்து சென்ற பின்னர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி வேட்பாளர் உட்பட ஆதரவாளர்களால் வீரமுனை வட்டார வேட்பாளர் ஏ.சி.எம்.சஹீல் உட்பட அவரது ஆதரவாளர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தற்போது சூடுபிடித்துள்ள நிலையில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தில் முதலாவது தேர்தல் வன்முறை சம்பவமாக இது குறிப்பிடப்பட்டுள்ளது.





EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# நல்லூர் சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா!

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா புதுவருடப் பிறப்பு தினமான நேற்று நடைபெற்றது.

(படங்கள் : பூ.பத்மலிங்கம்)







# நல்லூர் சந்திரசேகரப்பிள்ளையார் ஆலயத்தில் சப்பை ரதத் திருவிழா!

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் சப்பை ரதத் திருவிழா நேற்று முன்தினம் (13) நடைபெற்றது.

(படங்கள் - ஐ.சிவசாந்தன்)



# மாநில உரிமைகளை பாதுகாக்க உயர்நிலை குழு: சட்டப்பேரவையில் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



மாநில உரிமைகளைப் பாதுகாக்க ஓய்வு பெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் உயர்நிலைக் குழு அமைக்கப்படும் என தமிழக சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

மாநில சுயாட்சி தொடர்பாக தமிழக சட்டப்பேரவையில் இன்று விதி எண் 11 இன் கீழ் முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாநிலங்களின் நியாயமான உரிமைகளைப் பாதுகாக்க உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்படுகிறது. இந்தக் குழுவின் இடைக்கால அறிக்கை வரும் ஜனவரி 2026 இல் சமர்ப்பிக்கப்படும். இறுதி அறிக்கை இரண்டு ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்படும். இக்குழு மாநில உரிமைகளை மீட்டெடுப்பதற்கான பரிந்துரைகளை அரசுக்கு வழங்கும்.

மாநில பட்டியலில் உள்ள கல்வி, மருத்துவம், சட்டம், நிதி ஆகியவற்றை மத்திய அரசு மடைமாற்றம் செய்ய முயற்சி செய்து வருகிறது. மருத்துவக் கொள்கையை நீட் தேர்வு நீர்த்து போகச் செய்துள்ளது. நீட் தேர்வு காரணமாக பல மாணவர்களின் மருத்துவக் கனவு சிதைந்து போயுள்ளது. இதனால் பல மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.

மேலும், மும்மொழிக் கொள்கை என்ற போர்வையில் இந்தியை திணிக்க முயற்சி நடக்கிறது.

ஜி.எஸ்.டியை கொண்டு வந்த போதே தமிழ்நாடு அதற்குக் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தது. மத்திய அரசின் ஜி.எஸ்.டி. முறையால் மாநில அரசுகளுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாறாக மாநில உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டு வருகின்றன.

மாநில உரிமைகளுக்கான முதல் குரல் தமிழகத்தில் இருந்துதான் ஒலிக்கத் தொடங்கும். அந்த வகையில் மாநிலங்களின் நியாயமான உரிமைகளை பாதுகாக்க ஓய்வு பெற்ற நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் குழு அமைக்கப்படும். அனைத்து மாநிலங்களின் நலன் கருதி இந்த உயர்மட்ட குழு அமைக்கப்படுகிறது. இதில் ஓய்வுபெற்ற முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி அசோக் வர்தன், திட்டக்குழு முன்னாள் தலைவர் நாகநாதன், ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக இருப்பர். இந்தக் குழுவின் இடைக்கால அறிக்கை வரும் ஜனவரி 2026 இல் சமர்ப்பிக் கப்படும். இறுதி அறிக்கை இரண்டு ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்படும்." என்றார்.

# அனைவரும் அமைதி காக்கவும்: மம்தா பானர்ஜி வேண்டுகோள்!



மாநிலத்தில் அமைதி நிலவ அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் வன்முறை போராட்டங்கள் மூலம் பொறியில் சிக்காதீர்கள் எனவும் மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வக்பு சட்ட திருத்தத்தை எதிர்த்து முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசிக்கும் மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தின் துலியன் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை போராட்டங்கள் நடைபெற்றன. இதில் மூன்று பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். இதையடுத்து, இந்தப் போராட்டம் இரு தரப்பினரிடையேயான மோதலாக உருவெடுத்தது. மாநிலத்தின் வேறு சில பகுதிகளிலும் வன்முறைச் சம்பவங்கள் நடந்தன.

இதனிடையே, மேற்கு வங்கத்தின் தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள பங்கரில் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே நேற்று ஏற்பட்ட மோதலில் பலர் காயமடைந்தனர், பல பொலிஸ் வாகனங்கள் எரிக்கப்பட்டன.

வக்பு திருத்தச் சட்டம் மேற்கு வங்கத்தில் அமல்படுத்தப்படாது என்று கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்த மம்தா பானர்ஜி மாநிலத்தின் அமைதிக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். நேற்று நடந்த வன்முறையை அடுத்து, அனைவரும் அமைதி காக்க வேண்டும் என்ற மீண்டும் மம்தா பானர்ஜி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள மம்தா பானர்ஜி,

"மதத்தின் பெயரால், மதத்துக்கு தொடர்பற்ற விளையாட்டுகளை யாரும் விளையாடக்கூடாது. பக்தி, பாசம், மனிதநேயம், அமைதி, நட்பு, கலாச்சாரம், நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றையே தர்மம் குறிக்கிறது. மனிதர்களை நேசிக்க வேண்டும் என்பதே அனைத்து மதங்களின் உயர்ந்த கருத்தாக உள்ளது. நாம் தனியாகப் பிறக்கிறோம், தனியாகவே இறக்கிறோம்; பிறகு ஏன் சண்டையிட வேண்டும்? கலவரங்கள், போர், அமைதியின்மை ஆகியவை எதற்கு?

அனுமதி பெற்று அமைதியான முறையில் போராட்டங்களை நடத்த அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால், யாராக இருந்தாலும் சரி, சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ள அனுமதி கிடையாது. சட்டத்தின் பாதுகாவலர்களாக நாங்கள் இருக்கிறோம். சட்டத்துக்கு அப்பாற்பட்டு செயல்படுபவர்கள் எங்களுக்குத் தேவையில்லை. அதனால்தான் கூறுகிறேன், யாராவது உங்களைத் தூண்டிவிட முயற்சிக்கும்போது, பொறியில் சிக்கிக்கொள்ள வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்திரமூட்டல்களுக்கு மத்தியில் மனதை அமைதியாக வைத்திருப்பவர்கள்தான் உண்மையான வெற்றியாளர்கள். அதுதான் உண்மையான வெற்றி" என்று தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், முர்ஷிதாபாத்தில் நிலைமை படிப்படியாக இயல்பு நிலைக்குத் திரும்பி வருவதாகவும், கடைகள் மீண்டும் திறக்கப்பட்டு, இடம் பெயர்ந்த குடும்பங்கள் திரும்பி வரத் தொடங்கியுள்ளன என்றும் மேற்கு வங்க காவல்துறை தெரிவித்துள்ளது.







# விண்வெளிக்கு சென்றடைந்த பெண்கள் பூமிக்கு திரும்பினார்

விண்வெளியை சென்றடைந்த பெண்களை மாத்திரம் கொண்ட ப்ளூ ஒரிஜின் குழுவினர் பாதுகாப்பாக பூமிக்கு திரும்பியுள்ளனர்

இலங்கை நேரப்படி நேற்றிரவு 07 மணிக்கு இந்த குழு விண்வெளிக்கான தமது பயணத்தை ஆரம்பித்தது.

06 பேர் கொண்ட இந்தக் குழுவை, ஜெ:ப் பெசோஸால் நிறுவப்பட்ட விண்வெளி நிறுவனமான ப்ளூ ஒரிஜின், அதன் நியூ ஷெப்பர்ட் ரொக் கெட்டில் விண்வெளிக்கு அனுப்பி யிருந்தது.

இந்தக் குழுவில் பொப் பாடகியான கெட்டி பெர்ரி, செய்தியாளர் கெய்ல் கிங், சிவில் உரிமைகள் சட்டத்தரணி அமாண்டா நுயென், நாசாவின் முன்னாள் ரொக்கெட் விஞ்ஞானி ஆயிஷா போவே, திரைப்பட தயாரிப்பாளர் கேரியன் :ப்ளின் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இவர்களுடன் ஆறாவது பெண்ணாக இந்தக் குழுவை வழிநடத்துபவரான ஜெ:ப் பெசோஸின் காதலி லோரன் சான்செஸ் பயணித்துள்ளார்.

இந்த பயணம் சுமார் 11 நிமிடங்கள் மாத்திரமே நீடித்துள்ளதாகவும் விண்வெளியில் இருந்து பூமியின் அழகிய காட்சியைக் கண்டுகளித்த பின்னர் அவர்கள் மீண்டும் பூமிக்கு திரும்பியுள்ளனர்.

விண்வெளி சுற்றுலாவை ஊக்குவிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.





# சூடானின் டார்ஃபர் பகுதியில் தாக்குதல்; 400 பேர் உயிரிழப்பு

சூடானின் டார்:பர் பகுதியில் துணை இராணுவப்படையினர் அண்மையில் நடத்திய தாக்குதல்களில் 400 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

நம்பகமான ஆதாரங்களை மேற்கோள்காட்டி ஐக்கிய நாடுகள் சபை இந்த செய்தியினை வெளியிட்டுள்ளது.

சூடான் இராணுவத்தினால் கைப்பற்றப்பட்ட டார்:பர் மாநிலத்தின் தலைநகரை மீட்கும் முயற்சியில் துணை இராணுவப்படையினர் அண்மையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்படி, டார்:பர் பகுதியில் உள்ள ஏதிலிகள் முகாம்கள் மீது துணை இராணுவப்படையினர் தரைவழி மற்றும் வான்வழித் தாக்குதல்களை நடத்தியிருந்தனர்.

இந்த தாக்குதல்கள் உலகின் மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடியை உருவாக்கியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

அத்துடன், மில்லியன் கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.



கனடா முரசு
செவ்வாய்க்கிழமை 15/04/2025

## ஹாமில்டனில் துப்பாக்கிச் சூடு

கனடாவில் ஹாமில்டன் நகரில், கன்சஷன் ஸ்ட்ரீட் மற்றும் ஈஸ்ட் 33 ஆவது தெரு பகுதியை அண்மித்த பகுதியில், கடந்த ஞாயிற்றுக் கிழமை அதிகாலை பல

03



# கொன்சர்வேட்டிவ் கட்சி குறித்த விமர்சனங்கள் சரியானவை

## ஒன்ராறியோ மாகாண முதல்வர் டக் போர்ட் தெரிவிப்பு

**கொன்சர்வேட்டிவ் கட்சி தொடர்பில் தனது நீண்டகால தேர்தல் ஆலோசகர் கோரி டெனெய்க் வெளியிட்ட கருத்துகளை முழுமையாக ஆதரிப்பதாகத் ஒன்ராறியோ மாகாண முதல்வர் டக் போர்ட், தெரிவித்தார்.**

**டெனெய்க், கனடாவின் கூட்டணி கட்சி தலைவரான பியர் பொய்லிவ்ரின் தேர்தல் இயந்திரத்தை கடுமையாக விமர்சித்திருந்தார்.**

அண்மையில் நடைபெற்ற கருத்துக்கணிப்புகளில் காணப்படும் விவரங்களை சுட்டிக்காட்டி, 'பொய்லிவ்ரும் அவரது குழுவும், வாக்குகள் பெறும் முற்றிலும் இழந்துவிட்டனர்,' என்று சுட்டிக்காட்டியிருந்தார்.

கருத்துக் கணிப்பு முடிவுகளை சிலரினானால் ஏற்க முடியாது என்ற போதிலும் இதுவே யதார்த்தம் என டெனெய்க் சுட்டிக்காட்டியிருந்தார்.

தனது தேர்தல் பிரச்சார மேலாளர் டெனெய்க்கின் கருத்துக்கள் உண்மையானவை எனவும், கொன்சர்வேட்டிவ் கட்சி உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டுமெனவும் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

# ஒன்ராறியோ சட்டசபையில் முதல் பெண் சபாநாயகர்

ஒன்ராறியோ சட்டசபையில் வரலாற்று சாதனை படைக்கப்பட உள்ளது.

மாகாணத்தின் முதல் பெண் சபாநாயகரை தேர்வு செய்யும் பணிக்கு உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர்.

கடந்த ஏழு ஆண்டுகளாக சட்டசபையை வழிநடத்தி வந்த டெட் ஆர்னட் ஓய்வு பெறுவதனால், புதிய சபாநாயகர் தேர்வு இந்த அமர்வின் முதன்மை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பதவிக்காக இரண்டு உறுப்பினர்கள் போட்டியிடுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆளும் புரோகிரெஸிவ் கன்சர்வேட்டிவ் கட்சியின் டொன்னா ஸ்கெல்லி மற்றும் நியூ டெமோகிராடிக் கட்சியின் ஜெனிபர் பிரெஞ்ச் ஆகியோர் சபாநாயகர் பதவிக்காக போட்டியிடுகின்றனர்.

முன்னர் இருவரும் துணை சபாநாயகர்களாக பணியாற்றிய அனுபவம் கொண்டவர்கள்.





# வாக்காளர்களை ஏமாற்றக்கூடிய குறுஞ்செய்திகள் குறித்து எச்சரிக்கை

கனடாவில் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், வாக்காளர்களை ஏமாற்றக்கூடிய குறுஞ்செய்திகள் குறித்து மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தல் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவுறுத்தலை Canadian Research Insights Council (CRIC) விடுத்துள்ளது.

கேல்கரியை சேர்ந்த ஸ்டேசி ஸ்கோனெக் என்பவர், அவரது கைபேசியில் 'ERG National Research' என்ற பெயரில் வந்த வாக்குச் சோதனை குறுஞ்செய்திக்கு பதில் அளித்தபோது சந்தேகம் எழுந்துள்ளது.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், "முதலில் வாக்குப் போக்கைக் கேட்டார், பின்னர் பின்கோடு கேட்டார். உண்மையில் என் பெயர் தேவையில்லை என்பதே எனக்கு சந்தேகத்தை உருவாக்கியது," என்று ஸ்டேசி கூறியுள்ளார்.

இந்நிலையில், இதே போன்ற முறைப்பாடுகள் கனடா முழுவதும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பலர் இந்த குறுஞ் செய்திகளில் தங்களது தனிப்பட்ட தகவல்களை பகிர்ந்துவிட்டதற்குப் பிறகு அச்சத்தில் இருக்கின்றனர் என தெரிவிக்கப்படுகின்றது.

முக்கியமாக, மூத்த குடிமக்கள் இது போல பதில் அளித்துவிட்டு பின்னர் தங்களின் பாதுகாப்பு தொடர்பாக கவலைப்படுகின்றனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# பிரிட்டிஷ் கொலம்பியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 6 வயது சிறுமி பலி

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் உள்ள சர்ரே நகரில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஆறு வயது சிறுமி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

பாதசாரிகள் மீது வாகனத்தை மோதிய சாரதி சம்பவ இடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என பொலிஸார் குற்றம் சுமத்தியுள்ளனர்.

விபத்து சர்ரே நகரின் 164 வீதி மற்றும் 108 அவென்யூ சந்திப்பில் இடம்பெற்றது.

மூன்று பாதசாரிகள் ஒரு வாகனம் மோதி காயமடைந்துள்ளனர் என பொலிஸாருக்கு தகவல் வந்தது.

விபத்து இடத்திற்கு விரைந்த தீயணைப்புத் துறையினர் மற்றும் மருத்துவர்கள் கடுமையான முயற்சிகளையும், உயிர்காக்கும் மருத்துவ நடவடிக்கைகளையும் எடுத்த போதும், 6 வயது சிறுமி உயிரிழந்துள்ளார்.

மேலும், இந்த விபத்தில் 7 வயது சிறுமி ஒருவருக்கு மேல்புற உடல் காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன், 16 வயது சிறுவனுக்கு காலில் மற்றும் உடலில் காயங்கள் ஏற்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனால், அவர்கள் இருவரின் உயிருக்கு தற்போது ஆபத்து இல்லை எனவும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

விபத்து எப்படி ஏற்பட்டது என்றதற்கான காரணம் இதுவரை உறுதி செய்யப்படவில்லை. ஆனால் மதுபானம் காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளது என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.




# எனது 100 ஆவது வயதில் 100 வாழ்த்துக்கள் வேண்டும்

## ஆசைப்பட்ட நபருக்கு காத்திருந்த இன்ப அதிர்ச்சி

தனது 100 ஆவது வயதில் தனக்கு 100 வாழ்த்துக்களாவது கிடைக்காதா என்ற ஆசையில் இருந்தார், இரண்டாம் உலகப்போரில் பங்கேற்ற வீரர் ஒருவர்.

ஆனால், மக்களோ அவர் எதிர்பார்க்காத அளவில் அவருக்கு இன்ப அதிர்ச்சியை அளித்துள்ளார்கள்.

தனது 18ஆவது வயதில் இரண்டாம் உலகப்போரில் பங்கேற்றார் கேஸ்டன் என்னும் கடற்படை வீரர்.

தற்போது கனடாவின் கியூபெக்கில் வாழும் கேஸ்டன், ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி தனது 100 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடிய நிலையில், தனது 100 ஆவது பிறந்தநாளுக்கு தனக்கு 100 வாழ்த்துக்களாவது கிடைக்க வேண்டும் என ஆசைப்பட்டார் அவர்.

அவரது நண்பர் ஒருவர் அவரது ஆசையை சமூக ஊடகம் ஒன்றில் வெளிப்படுத்த, கேஸ்டனுடைய 100ஆவது பிறந்தநாளன்று, 100 அல்ல, 1,700க்கும் அதிகமான வாழ்த்து அட்டைகளை அனுப்பி கேஸ்டனுக்கு இன்ப அதிர்ச்சியை அளித்துள்ளார்கள் உலகமெங்கும் உள்ள மக்கள்.

கேஸ்டனுடைய பிறந்தநாளுக்கு முந்தைய இரவு, நிகழ்ச்சி ஒன்றில் அவரிடம் அவருக்கு அனுப்பப்பட்ட வாழ்த்து அட்டைகள் அடங்கிய பெரிய பெட்டி ஒன்று கையளிக்கப்பட்டது.

அதில் 1,700க்கும் அதிகமான வழ்த்து அட்டைகள் இருக்கவே, மனம் குளிர்ந்து மகிழ்ச்சியில் ஆழ்ந்துவிட்டார் கேஸ்டன்.




## ஹாமில்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துப்பாக்கி சூடுகள் நடந்தன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஞாயிறு காலை 5 மணியளவில் சம்பவ இடத்திற்கு விரைந்ததாக பொலிஸ் தெரிவிக்கின்றது.

பகுதியை பாதுகாப்பாக முடிந்தவரை சோதனை செய்த பொலிஸார், சந்தேக நபர்களையோ, பாதிக்கப்பட்டவர்களையோ கண்டுபிடிக்க முடியவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

அந்த நேரத்தில் அந்தப் பகுதியில் வாகனத்தில் பயணம் செய்தவர்கள், தங்கள் டாஷ் கேமராவில் பதிவு செய்யப்பட்ட காட்சிகள் ஏதேனும் இருப்பின், பொலிஸாரிடம் பகிர்ந்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம் என அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக, மக்களின் பாதுகாப்பிற்காக பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சந்தேக நபர்களை பற்றிய தகவல் இருப்பின் உடனடியாக அதிகாரிகளை தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.